# பல்கலை. மகளிரியல் துறை இயக்குநர் பணியிடை நீக்கத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தினமணி

திருச்சி, பிப். 10: திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் மையத்தின் இயக்குநர் முனைவர் ந. மணிமேகலையின் பணியிடை நீக்கத்தைக் கண்டித்து, பல்வேறு அமைப்பினர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருச்சி ரயில்வே ஜங்ஷன் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு பெரியார் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் த. இந்திரஜித், புதிய தமிழகம் மாநகர் மாவட்டச் செயலர் கோ. சங்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலர் அ.க. தமிழாதன், பெரியார் பாசறை அன்பழகன், சீனி விடுதலை அரசு, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க அமைப்பாளர் நிலவழகன், தமிழ்த் தேசியப் பொதுவுடைமைக் கட்சியின் மாநகரச் செயலர் கவித்துவன், ஆதித் தமிழர் பேரவையின் நிர்வாகி விடுதலை வெங்கட், நாம் தமிழர் கட்சியின் தலைவர் வழக்குரைஞர் பிரபு, மார்க்சீயப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் மாவட்டச் செயலர் கலியபெருமாள், வழக்குரைஞர் டி.கே.எஸ். செந்தில்குமார், பெரியார் திராவிடர் கழக மாவட்டச் செயலர் வே.க. குமார், இணைச் செயலர் த. புதியவன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முனைவர் மணிமேகலையின் பணியிடை நீக்க உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



முனைவர் மணிமேகலையின் பணியிடை நீக்க உத்தரவை ரத்து செய்ய வலியுறுத்தி, திருச்சியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள்.

நேரம் : காலை 10 மணி Date :10.02.2012

திருச்சி ரயில்வே ஜங்ஷன் எதிரே நடைபெற்ற திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் மையத்தின் இயக்குநர் முனைவர் ந.மணிமேகலையின் பணியிடை நீக்கத்தைக் கண்டித்து ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் மாவட்ட செயலாளர் பழ.ரமேஷ் தலைமையில் 15 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முன்னிலை வகுத்தோர் மாவட்ட தலைவர் பழ.திராவிடன் ,மாவட்ட அமைப்பு செயலாளர் விடுதலை வெங்கட் .மாநகர தலைவர் உறந்தை ரமணா, உறந்தை ராஜ் மற்றும் 15 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.இந்த கன்டன உரையில் திருச்சி மாவட்ட அமைப்பு செயலாளர் பேசுகையில் , சங்க காலத்தில் ஒரு மணிமேகலை அட்சய பாத்திரத்தில் அமுது தந்து மக்களுக்கு உதவினார் . அதே போல் இன்று உள்ள கலியுகத்தில் ஒரு மணிமேகலை தமிழ் நாட்டு மக்களுக்காக மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் மகளிருக்கான பல அமைப்புகளை கொண்டு வந்து தொழில் துறையில் மிகவும் சிறந்து விளங்க அரும்பாடுபட்டு வந்தார். அதை தாங்கி கொள்ள முடியாத பார்ப்பன இனத்தைசேர்ந்த தோழியர் மீனா அவர்கள் தோழியர் ந.மணிமேகலை பற்றி உண்மைக்கு மாறா ன செய்திகளை சொல்லி பணியிடைநீக்கம் செய்துள்ளார் .அம்பேத்கர் ,பெரியார் போன்றோர் பெண்களுக்காக பெண்னடிமையிலிருந்து வெளியே வர மிகவும் பாடுபட்டார்கள்.இவர் மற்றொரு பெண்ணை இவ்வளவு உண்மைக்கு மாறான செய்திகளை சொல்லி பணியிடை நீக்கம் செய்தது மிகவும் வருந்ததக்கது.இது போல் வருங்காலங்களில் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது மிகவும் நல்லது.இல்லையென்றால் இதனை வலியுறுத்தி ஆதித்தமிழர் பேரவையின் சார்பாக கன்டன ஆர்பாட்டம் நடத்துவோம் என்பதை இந்தவேளையில் சுட்டிகாட்டி கொள்கிறோம்.என்று பேசினார்.